**2026 ஜூலை மாதம் 23- ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 159/2025**

2026-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23- ஆம் தேதி வியாழக்கிழமை திரு.P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 (LW1) – மெர்சி கிளாரா |
| தகப்பனார் பெயர்: | சூசை மாணிக்கம் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், தேனி காவல்நிலையம் |
| வயது : | 41 |

23.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 15.09.2024ம் தேதியன்று காலை 11.30 மணியளவில் தேனி, சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் அவர்களுடன் நானும், என்னுடன் முதல்நிலை காவலர் 1046 திரு.சதீஷ்குமார் என்பவரும் புதிய பேருந்து நிலையத்திற்கு ரோந்து அலுவலாக சென்றபோது, புதிய பேருந்து நிலையம் கோம்பை பார் எதிரே உள்ள பெட்டிக்கடையில் சோதனை

செய்தபோது, அரசால் தடைசெய்யப்பட்ட நச்சுத்தன்மையுள்ள கணேஷ் 701, 65 பவுச்சுகளில் உள்ள 975 பாக்கெட்டுகளும், கூலிப் 9 பவுச்சுகளில் 135 பாக்கெட்டுகளும் சோதனையில் கைப்பற்றி பின்னர் விலாசம் கேட்டு தெரிந்த பின்னர் வாஞ்சிநாதன், விஸ்வதாஸ் காலனி, 1வது தெருவை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது.

2. அவரது முதல் மனைவி திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகளுடன் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், காத்தம்மாள் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து தற்சமயம் பெட்டிக்கடை வைத்து பிழைத்து வருவதாகவும், அதில் போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் அடையாளம் தெரிந்த பெயர் விலாசம் தெரியாத நபர் இருசக்கர வாகனத்தில் வந்து, தினமும் புகையிலை பாக்கெட்டுகளை கொடுத்து, இதை விற்றால் அதிக வருமானம் கிடைக்கும் என்று கூறியதால், நானும், எனது மனைவியும் அதை வாங்கி, எங்களது பெட்டிக்கடையில் வைத்து விற்பனை செய்தோம் என்று கூறினார்.

3. விற்பனை செய்யும்போது, காவல்துறையினர் என்னையும், எனது மனைவியையும் அழைத்து விசாரணை செய்ததில் நானும், எனது மனைவியும் உண்மையை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தோம் என்று சார்பு ஆய்வாளர் திரு.சரவணன் அவர்களிடம் 1வது எதிரி வாஞ்சிநாதன் கூறினார். 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அப்போது பொது சாட்சிகள் முன்வராததால் நானும், முதல்நிலை காவலர் 1046 திரு.சதீஷ்குமாரும் சாட்சியாக இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம். 13.00 மணிக்கு கைப்பற்றப்பட்ட பொருட்கள் அத்தாட்சியில் தயார் செய்தார். அதில் நானும், சதீஷ்குமாரும் கையொப்பம் செய்தோம்.14.00 மணிக்கு எதிரிகள் வாஞ்சிநாதன் மற்றும் காத்தம்மாள் ஆகியோர்களை சார்பு ஆய்வாளர் கைது செய்து, காவல்நிலையம் எடுத்து வந்தார்.

4. தேனி, காவல்நிலைய குற்ற எண்.364/2024 பிரிவுகள் 123, 274, 275 BNS & 6(b), 24(1) of COTPA Act –ன்படி வழக்கு பதிவு செய்ய, சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு நானும், முதல்நிலை காவலர் 1046 சதீஷ்குமாரும் உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போதிய அவகாசம் வழங்கியும், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 23.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.23 16:21:29 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
23.07.2026